12 OCT 2015

EASTERN UNIVERSITY, SRI LANKA

FACULTY OF COMMERCE AND MANAGEMENT

Part – I (2nd Year) Examination in Bachelor of Business Administration – 2010/2011

(Repeat) (August / September / October - 2015)

# EXB 206 Organizational Behaviour

Answer all questions

Time: 03 Hours

Q1. பின்வரும் விடய கற்கையினை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

**Clarkston நிறுவனத்தில் பல்வேறுபட்ட விளங்கிக்கொள்ளுதல்கள்**

சூசன் தனது விரல்களினால் மேசையின் மீது தட்டிக்கொண்டிருந்தாள். அவளுக்கு அந்நேரத்தில் ஓர் பாரிய பிரச்சினை காணப்பட்டது. அடுத்த கட்டமாக என்ன செய்வது என்று தெரியவில்லை. ஜக்கினைக் குறித்து சூசனுக்கு மிகுந்த தெளிவு காணப்பட்ட போதிலும் அக்காரியாலயத்தில் அவளுக்குக் காணப்பட்ட சந்தேகத்திற்குரிய இறுதி நபராக ஜக்கே காணப்பட்டான். கடந்த கால நினைவுகளை மீட்டிப்பார்க்கும்போது சிலவேளை சூசனுக்கு சரியான தீர்வு கிடைக்கலாம்.

சூசன் Clarkston நிறுவனத்தில் கடந்த 20 ஆண்டுகளாக பங்கிடல் முகாமையாளராக தொழிற்பட்டு வருகின்றாள். சில காலம் சிறையில் இருந்ததன் நிமித்தம் உண்மை மற்றும் கடின உழைப்பு என்பவற்றின் முக்கியத்துவத்தினை அவள் உணர்ந்திருந்தாள். அவளது கடந்த காலத்தினைப் பாராது ஹென்றி அவளுக்கு இந்நிறுவனத்தில் வாய்ப்பினை அளித்திருந்தார். அதன் விளைவாக இன்று சூசன் அந்நிறுவனத்தில் ஓர் பிரபல்யமான முகாமையாளராக காணப்படுகின்றாள். ஒரு சிலருக்கே அவளது பின்புலமானது தெரிந்திருக்கின்றது.

இந்நிலையில் சூசன் கடந்த 6 மாத காலத்திற்கு முன்பே சிறையில் இருந்து விடுதலையான ஜக்கினை உள்வாங்கினாள். ஜக் தனது நிலையை சூசனுக்கு எடுத்துரைத்த போது எவ்வாறு ஹென்றி தனக்கு வாய்ப்பினை வழங்கினாரோ அதே போலவே தானும் ஜக்கிற்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என நினைத்தாள். பார ஊர்தியில் பொதிகளை ஏற்றும் ஊழியராக ஜக் சேர்ந்து தனது ஆற்றலை மற்றைய ஊழியர்கள் போலல்லாது மிகவும் வினைத்திறனாக வெளிப்படுத்தினான்.

இவ்வாறாக நிலைமை சுமுகமாக சென்று கொண்டிருந்த வேளையில் ஜக்கிற்கு புதிய நண்பர்கள் சேர ஆரம்பித்தனர். இந்நிலையில் இரு மாதங்களுக்கு முன்பு பொதிகளை ஏற்றும் ஊழியர் ஒருவரின் தொலைபேசியானது தொலைந்து விட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டது. இச்சந்தர்ப்பம் குறித்து சூசன் ஜக்கினை சந்தேகப்பட்டு அவனை அழைத்து விசாரித்தபோது அவன் உண்மையாகவும் அமைதியாகவும் தனது

அப்பாவித்தனமான நிலையை எடுத்துரைத்தான்.

அதற்கு அடுத்த கிழமையில் ஏற்பட்ட சம்பவம் சூசனுக்கு பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியது. மனித வள பிரிவில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் ஒவ்வொரு ஊழியரினதும் தகவல்களை பதிவேற்றம் செய்யும்போது பல ஊழியர்கள் சிறையிலிருந்து வெளியானவர்கள் என கண்டறிந்தார். அதற்கு அடுத்த நாள் நாளாந்த செலவுக்காக வைத்திருந்த பணத்தில் சில காணமல் போய்விட்டதாக அந்நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் முறைப்பாடு செய்தார். வேறு ஊழியர் ஒருவர் அன்றைய தினம் ஜக்கே அங்கு காணப்பட்டதாக தெரிவித்தார்.

அநேக ஊழிர்கள் ஜக்கே அக்குற்றவாளி என குற்றஞ்சாட்டத் தொடங்கினர். தொலைபேசியைத் தொலைத்த நபரும் ஜக்கே தனது தொலைபேசியை எடுத்ததாகவும் பிரச்சினை வர ஆரம்பித்தவுடன் அதனை ஜக் வைத்து விட்டதாகவும் தெரிவித்தார். இந்நிலையில் அநேக ஊழியர்கள் சூசனை அணுகி ஜக்கினை வேலையை விட்டு நிறுத்துமாறு கூறினர். அதே நேரம் சூசன் இப்பிரச்சினையைக் குறித்து ஜக்கிடம் வினவியபோது அவன் தன்னை நியாயப்படுத்த முற்பட்டதுடன் மிகவும் கோபமாகவும் காணப்பட்டான். ஆயினும் தான் பணத்தினை திருடியதை நிராகரிக்காது அதற்கான விளக்கத்தினையும் கொடுக்க ஆரம்பித்தான்.

இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையிலேயே சூசன் இக்கதையை மீள சிந்தித்ததுடன் பிரச்சினைக்கான தீர்வினையும் எடுக்க முற்பட்டாள். நிலமையானது ஜக்கிற்கு எதிராகவே (சந்தர்ப்பங்கள்) காணப்பட்டதுடன் அனைத்து ஊழியர்களும் ஜக்கே குற்றவாளி என உறுதியாக கூற ஆரம்பித்தனர். இந்நிலையில் ஜக்கினை வெளியேற்றாது விடின் அநேக ஊழியர்களின் நன்மதிப்பினையும் நம்பிக்கையினையும் சூசன் இழக்க வேண்டி ஏற்படும்.

**வினாக்கள்**

**i)** இவ்விடயக் கற்கையில் விளங்கிக்கொள்ளுதல் தொடர்பான ஏதேனும் பிரச்சினைகளை நீர் அடையாளம் காண்கின்றீரா? விளக்குக.

**(Total 06 Marks)**

**ii)** இவ்விடயக் கற்கையில் ஒருவரின் ஆளுமையானது (personality) செல்வாக்குச் செலுத்துகின்றதா? விளக்குக.

**(Total 06 Marks)**

**iii)** சூசனுக்கு நீங்கள் தரக்கூடிய அறிவுரை என்ன என விளக்குக.

**(Total 08 Marks)**

**iv)** ஜக்கிற்கு மற்றுமொரு வாய்ப்பினை அளிக்கலாமா? அளிக்கக்கூடாதா? ஆராய்க.

**(Total 08 Marks)**

**(Total 28 Marks)**

Q2. i) "முகாமையாளர்கள் பத்து வேறுபட்ட அதேவேளை மிகத் தொடர்புடைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என Henry Mintzberg கண்டறிந்தார்". அவ்வாறாக கண்டறியப்பட்ட மிக முக்கிய முகாமையாளர் பாங்குகள் (roles) ஏதேனும் நான்கினை (04) சுருக்கமாக விளக்குக.

**(08 Marks)**

ii) முகாமையாளர்கள் தங்கள் கடமைகளைச் செய்வதற்குத் தேவையான மிக முக்கியமான திறன்களை (Skills) விளக்குக.

**(06 Marks)**

iii) எவ்வகையான முகாமையாளர்களுக்கு எவ்வகையான திறன்கள் தேவைப்படுகின்றன என விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக.

**(04 Marks)**

**(Total 18 Marks)**

Q3. i) விளங்கிக்கொள்ளுதல் என்றால் என்ன என விளக்குக.

**(04 Marks)**

ii) நிறுவனங்கள் இலகுவழிகளைக் கையாளும் இரு சந்தர்ப்பங்களினை சுருக்கமாக ஆராய்க.

**(06 Marks)**

iii) "பல்வேறு தனிப்பட்டவர்கள் ஒரு விடயத்தை நோக்கினாலும் அதை அவர்கள் விளங்கிக்கொள்ளும் தன்மையானது வேறுபட்டதாகக் காணப்படுகின்றது". இவ்வாறு தனிநபர்கள் விளங்கிக்கொள்ளுதலானது வேறுபடுவதற்கான காரணங்களை விளக்கப்படத்தின் உதவியுடன் ஆராய்க.

**(08 Marks)**

**(Total 18 Marks)**

Q4. i) "ஒரு நிறுவனத்தின் கட்டமைப்பை உருவாக்கும்போது முகாமையாளர்கள் பின்வரும் ஆறு (6) விடயங்கள் சார்பாக தமது கவனத்தினைச் செலுத்த வேண்டும்". அவ்வாறான விடயங்களினை எடுத்துரைக்குக.

**(06 Marks)**

ii) "குழுக்களின் மூலம் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே அநேகமாக தனிநபர்கள் குழுக்களில் ஒன்றிணைகின்றார்கள்". அவ்வாறான நன்மைகளை சுருக்கமாக ஆராய்க.

**(06 Marks)**

iii) குழு அபிவிருத்திற்கான 5 படிநிலை மாதிரியை சுருக்கமாக விளக்குக.

(06 Marks)

(Total 18 Marks)

Q5. i) "தற்காலத்தில் முகாமையாளர்கள் எதிர்கொள்ளத்தக்க மாற்றத்திற்கான காரணிகள் பல்வேறு வகைப்படுகின்றன". அவ்வாறான மாற்றத்தின் காரணிகளை உதாரணத்துடன் விளக்குக.

(06 Marks)

ii) "ஒரு நிறுவனத்தில் முரண்பாடானது பல்வேறு காரணங்களால் உருவாகுகின்றது". அவ்வாறான காரணங்களினை சுருக்கமாக விளக்குக.

(06 Marks)

iii) முரண்பாடானது ஏற்படுத்தக்கூடிய எதிர்மறையான விளைவுகளை சுருக்கமாக விளக்குக.

(06 Marks)

(Total 18 Marks)